மியூசிக்

# ஆகஸ்டில் ஒரு டிசம்பர்!

டிசம்பர் சீஸன்! சில முன்னணி சபாக்களில், மேடையில் பக்கவாட்டில் உட்கார்ந்து கச்சேரி கேட்கவே நூறு ரூபாய் டிக்கெட்!

அரசு இசைக் கல்லூரிகளிலும் தனியார் நடத்தும் இசைப் பள்ளிகள் மற்றும் பயிற்சி வகுப்புகளிலும் பயிலும் மாணவ - மாணவிகளுக்கு இந்தக் கச்சேரிகளைக் கேட்கக் கட்டுப்படியாகுமா? அரை டஜன் சீனியர் ஆர்டிஸ்டுகளையாவது கேட்கா விட்டால் அவர்களுடைய ஆர்வம் அடங்குமா? கற்பனை பெருகுமா? உணர்ச்சி தூண்டப்படுமா? உந்துசக்தி பிறக்குமா...?

இப்படிப் பல 'மா'க்கள் இருப்பதை உணர்ந்தது, ஒரு மா - 'மாத்ருகா' என்ற அமைப்பு. இசை மாணவர்களின் குறை தீர்க்க உறுதி கொண்டது. ஆகஸ்டில் ஒரு டிசம்பர் சீஸனை நடத்த முடிவெடுத்தது! அந்த மாணவர்களிடமே அதற்கான ஆலோசனைகளையும் கேட்டது.



''மியூசிக் அகாடமியின் இசைக் கல்லூரி, கலாக்ஷேத்ரா, சென்னை (அடையாறு) அரசு இசைக் கல்லூரி ஆகிய மூன்று நிறுவனங்களின் மாணவர்கள் சுமார் ஐந்நூறு யோசனைகளை வழங்க, அவற்றிலிருந்து சலித்தெடுத்தும், சேர்த்தும், மாற்றியும் ஆறு நாள் இசை விழாவை வடிவமைச்சிருக்கோம்'' என்கிறார் 'மாத்ருகா'வின் நிறுவனர்களுள் ஒருவரான டி.எம்.கிருஷ்ணா. இப்பணியில் இவருடன் இணைந்து இயங்கிக் கொண்டிருப்பவர் மற்றொரு நிறுவனரான பாம்பே ஜெயஸ்ரீ. மாத்ருகாவின் முயற்சியில் ஒய்.ஏ.சி.எம் (Youth Association for Classical Music) இணைந்துள்ளது. மேற்படி மூன்று இசைப் பயிற்சி நிறுவனங்களும் கைகோத்துள்ளன.

முன்னணி வாய்ப்பாட்டு, வாத்திய இசைக் கலைஞர்கள் அனேகர் பங்கேற்கும் கச்சேரிகள், அவற்றின் இறுதியில் கேள்வி - பதில் நேரம், செயல்முறை விளக்க நிகழ்ச்சிகள், கலைஞர்களைப் பற்றிய டாகுமென்டரி படங்கள், கலைஞர்களுடன் நேருக்கு நேர், மாணவர்களே வழங்கும் கச்சேரிகள் என்று இந்த இசைவிழா, காலை 9.00 மணி தொடங்கி பிற்பகல் மூன்று மணி வரையிலான பல்சுவை பாக்கேஜ் ஆக ஆகஸ்ட் 5 முதல் 10 வரை நடைபெறும்.

''மாணவர்களுக்குச் சௌகரியமான நேரத்தில் அவர்களுடைய வகுப்பறை வாசலுக்கே நிகழ்ச்சிகளை எடுத்துச் செல்கிறோம்'' என்கிறார் ஜெயஸ்ரீ.

மதிய உணவும் தரப் போகிறார்களாம்! அப்படியானால் செலவு...? ஸ்பான்ஸர்கள் உதவி தேவைப்படுமே...?

''தேடிக்கொண்டிருக்கிறோம்'' என்கிறார் கிருஷ்ணா.

இவ்விருவரும் அடிக்கடி புது முயற்சிகளில் இணைவதன் ரகசியம் என்ன...?

''சுருதி வேறாயிருந்தாலும் எங்க அலைவரிசை ஒண்ணா இருக்கு... மாத்ருகாவைச் சேர்ந்து ஆரம்பிச்சோம்'' என்கிறார் கிருஷ்ணா.

'ஸ்வானுபவா' என்ற பெயரிலான இந் நிகழ்ச்சியில், தனியார் பள்ளிகளிலும் தனிப்பட்ட முறையிலும் இசை கற்கும் மாணவ - மாணவிகள் இதில் கட்டணம் இன்றிப் பங்கேற்கலாம்.

''இது போன்ற நிகழ்ச்சிகளை சென்னையிலேயே மீண்டும் மீண்டும் நடத்துவது என்ன நியாயம்?'' என்று கேட்டால், ''பொறுங்கள், அடுத்தடுத்த ஆண்டுகளில் 'ஸ்வானுபவா' வெவ்வேறு ஊர்களுக்கு தம்பூராவுடன் ரயிலேறிவிடும்'' என்கிறார் கிருஷ்ணா.

சரி, 'ஸ்வானுபவா' என்ற பெயர் ஏன்...?

''ஸ்வானுபவம் என்பது, ஒரு கலைஞர் தமது படைப்பின் மூலம் பெறும் பிரத்யேக அனுபவம் - அவருக்கு மட்டுமே சொந்தமானது. இந்த இசைவிழாவுக்கு வரும் ஒவ்வொரு மாணவருக்கும் அத்தகைய பிரத்யேக அனுபவமாக அது அமையணும்ங்கற நோக்கில் அப்படிப் பெயர் வைச்சோம்'' என்கின்றனர் இருவரும். இந்த ஆறுநாள் இசை விழாவில் மாணவரல்லாத மாமா - மாமி ரசிகர்களுக்கு ''நோ என்ட்ரி, ப்ளீஸ்!''

**- சீதா ரவி**

ஸ்வானுபவா குறித்து மேலும் விவரங்களுக்கு:

http://svanubhava.blogspot.com/ பதிவு செய்துகொள்ள விரும்பும் இசை மாணவர்கள், விண்ணப்பங்களை svanubhava@gmail.com என்ற இணைய முகவரிக்கு அனுப்பவும்.

**தொடர்புக்கு:**

ரித்விக் : 9884234740
எஸ்.ஆர்.எதிராஜன் : 9840211166
எமானுயல் : 9840118451
கார்த்திகா : 9941218120
சைத்ரா : 9884606531